**செய்தி வெளியீடு எண்:556** **நாள் : 5.11.2015**

**செய்தி வெளியீடு**

தமிழகத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களின் நலனுக்காகவும், தொழில் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் அரசால் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அதிக அளவில் தொழில் திறன் மிகுந்த தொழிலாளர்களின் தேவையினை ஈடு செய்யவும், தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விழையும் மாணாக்கர்களின் ஆர்வத்தை ஈடு செய்யும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி எண் 110ன் கீழ் வெளியிடப்பட்ட 2014–2015ஆம் ஆண்டிற்கான அறிவிப்பின் படி திருவள்ளூர் மாவட்டம் வடகரை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியின் வளாகத்தில் புதிதாக தொடங்கப்படும் தொழிற் பயிற்சி நிலையத்தில் 2015 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் நல மாணவ/மாணவிகளுக்கு சேர்க்கை நடைபெறுகின்றது. 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு வெல்டர் மற்றும் வயர்மேன் பயிற்சி வகுப்புகளும், 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு பிட்டர், எலக்ட்ரிசியன் மற்றும் மோட்டார் வாகனம் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இப்பயிற்சி வகுப்பில் சேரும் மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணிணி, மிதிவண்டி, சீருடைகள், வரைபடக்கருவி மற்றும் பேருந்து கட்டணங்கள் இலவசமாக வழங்குவதுடன் பயிற்சியின் போது உதவித் தொகையாக மாதம் ரூ.500/– வழங்கப்படும். மாணவர்களுக்கு வயது வரம்பு 14வயது முதல் 40 வயதிற்குள்ளாகவும், மாணவியர்களுக்கு வயது உச்சவரம்பு இல்லை. இப்பயிற்சி வகுப்புகளில் சேருவதற்கு விண்ணப்பப் படிவங்கள் பெற்று அனுப்புவதற்கு கடைசி நாள்16.11.2015 என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விண்ணப்பப் படிவம் பெறும் முகவரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினா் நல அலுவலகம், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வளாகம், திருவள்ளூர் மாவட்டம்.

இயக்குநர்
ஆதிதிராவிடர் நலத்துறை

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**